**Dated : 30.07.2026** (நேரம் : மதியம் 12.35 மணி)

**MCOP. No: 28/2024**

**எ.ம.சா. 1 திரு. அம்ஜத் இப்ராஹிம்**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு கூடுதலாக முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**கூடுதல் முதல் விசாரணை –**

நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சிறிய நோட்டு புத்தகம் எ.ம.சா.ஆ.5. எனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டதை காண்பிக்கும் புகைப்படங்கள் எ.ம.சா.ஆ.6 வரிசை (3 எண்ணிக்கை). எனக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே எ.ம.சா.ஆ.7. என்னுடைய ஸ்கேன் ரிப்போர்ட் எ.ம.சா.ஆ.8.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் தற்பொழுது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை பற்றி விபரங்கள் எதையும் என்னுடைய முந்தைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் உண்மை தன்மை இல்லாததால் தான் அவற்றை பற்றி முந்தைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லாமால் தற்போது புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சியிடம் எ.ம.சா.ஆ.5. நோட்டை காண்பித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டபோது அதில் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று கூறுகிறார். என்னுடைய அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் மனுதாரருக்கு நான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.30 17:31:38 +0530

**5ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

மனுதாரருக்கு இழப்பீடு கொடுப்பதிலிருந்து தப்பிப்பதற்காக தற்போது எ.ம.சா–ஆ.5 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை வழங்கிய மருத்துவரை விசாரித்தால் தான் அவற்றின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குற்ற அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் மனுதாரருக்கு நான் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் 5ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR    Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.07.30 17:31:43 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.